# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை
## 1987-88

©
தமிழ்நாடு அரசு
1988

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 1987—88.

### பொருளடக்கம்.


| வரிசை எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1. | பணியாளர் .. .. .. .. | 1 |
| 2. | வருவாய் மற்றும் செலவு .. .. .. | 2 |
| 3. | கடிதத் தொடர்பு அளவும் தேர்வாணையத்தின் அமர்வுகளும் . | 4 |
| 4. | நேரடித் தெரிவுகள் .. .. .. | 4—7 |
| 5. | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவுகள். | 8 |
| 6. | சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன | 8—10 |
| 7. | ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன. | 10—12 |
| 8. | அறிவிக்கைகள் .. .. .. .. | 12 |
| 9. | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 12—13 |
| 10. | தகுதியும் பொருத்தமும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை. | 13 |
| 11. | அரசும் தேர்வாணையமும் .. .. | 13—22 |
| 12. | ஒப்புகை .. .. .. .. | 22—23 |


129-2—A

| பின் இணைப்புகள். | | பக்கம். |
|---|---|---|
| 1. | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 23—24 |
| 2. | நேரடித் தேர்வு—வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விபரம். | 25 |
| 3. | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்களை தெரிவு செய்யப் பட்ட பதவிகள். | 27—~~28~~ 29 |
| 4. | தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதி 1954, விதி 16(-பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விபரம். | 30—~~32~~ 33 |
| 5. | ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் முறையீடுகள் விபரம். | 34—40 ~~37—39~~ |
| 6. | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 41—42 |
| 7. | சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளின் விபரம். | 43 |
| 8. | அலுவலருக்கான அரையாண்டுத் தேர்வுகளும் மொழிப்புலமைத் தேர்வுகளும். | 44—46 |
| 9. | போதிய தகுதியும், பொருத்தமும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை பற்றிய விவரம். | 47 |

# பகுதி—ஒன்று. பணியாளர்

## தேர்வாணையம்.

திரு. தி. லட்சுமிநாராயணன், இ.ஆ.ப.(ஓய்வு)—
தலைவர்.

திரு. எம்.எஸ். அப்துல் காதர், பி.எஸ்.சி.—உறுப்பினர்.

திரு. ஒ.அ. கனகசபை, பி.ஏ.,பி.டி.,பி.எல்.,—
உறுப்பினர்.

திரு. அ. பொன்னம்பலம், பி.எஸ்.சி.(பொறியியல்)—
உறுப்பினர்.

திரு. ப. சுப்பராயன், எம்.ஏ.,—உறுப்பினர்.

திரு. பொ. இல. பொன்னுசாமி, இ.ஆ.ப. (ஓய்வு)—
உறுப்பினர்.

திரு இரா. பொன்னுசாமி, பி.ஏ.—உறுப்பினர்.

திரு. யு. எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு)—உறுப்பினர்.

திரு. எம். இராமன், இ.ஆ.ப.,—தேர்வாணைய செயலாளராக ஜூலை 15, 1987 பிற்பகல் பணியில் சேர்ந்தார்.

திரு. து. இரா. இராமசாமி, இ.ஆ.ப.,—ஜூன் 11, 1987 பிற்பகல் வரை தொடர்ந்து செயலாளராக பணியாற்றினார். தேர்வாணைய தேர்வு கட்டுப்பாடு அலுவலராக ஜூன் 11, 1987 பிற்பகல் பணியில் சேர்ந்தார்.

திரு. து. இரா. இராமசாமி, இ.ஆ.ப.,—தேர்வாணையக் கட்டுப்பாடு அலுவலர் தேர்வாணைய செயலாளராக ஜூன் 12, 1987 முதல் ஜூலை 8, 1987 பிற்பகல் வரை கூடுதல் பொறுப்பில் இருந்தார்.

திரு. இரா. பார்னஸ் சிகாமணி, இணைச் செயலாளர் தேர்வாணைய செயலாளராக ஜூலை 9, 1987 முதல் ஜூலை 15, 1987 பிற்பகல் வரை கூடுதல் பொறுப்பில் இருந்தார்.

தேர்வாணைய அலுவலகத்தில் மார்ச் 31, 1988 அன்று உள்ள பணியாளர்கள் பற்றிய விவரங்கள் பின் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி—இரண்டு.

## வருவாய் மற்றும் செலவு.

### வருவாய்.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (அ) நேரடித்தேர்வு மற்றும் இதர தேர்வுகள் .. | 7,99 |
| (ஆ) சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் .. | 15,94 |
| (இ) விண்ணப்ப படிவங்களின் விலை.. .. .. | 5,15 |
| மொத்தம் .. | 29,08 |

### செலவுகள்.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 01. சம்பளங்கள்— | |
| 1. அடிப்படை சம்பளம் .. .. | 77,38 |
| 2. அகவிலைப்படி .. .. .. .. | 21,30 |
| 3. மருத்துவச் செல்வுகள் .. .. | 3,10 |
| 4. ஏனையப்படிகள் .. .. .. | 17,67 |
| 5. பயணச் சலுகைகள் .. .. .. | 67 |
| 8. பண்டிகை முன்பணம் .. .. .. | 2,02 |
| 03. பயணச் செலவுகள் .. .. .. .. | 67 |
| 04. அலுவலகச் செலவுகள்— | |
| 1. தொலைபேசிக் கட்டணங்கள் .. .. | 1,15 |
| 2. ஏனையச் சில்லறைச் செலவுகள் .. .. | 14,06 |

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 05 தொழில்துறை, சிறப்புப் பணிகளுக்கு தொகை கோருதல். | 12,97 |
| 06. வாடகை கட்டண விதங்கள், வாகள .. | 2,27 |
| 08. விளம்பர, விற்பனை, பிரச்சாரச் செலவுகள் .. | 3,44 |
| 16. மோட்டார் வண்டிகள் :— | |
| 1. வாங்குதல் .. .. .. .. | 2,79 |
| 2. பராமரிப்பு .. .. .. .. | 12 |
| 3. எரிபொருள் செலவு .. .. .. | 1,08 |
| மொத்தம் .. | 1,60,69 |

## திருப்பிக் கொடுத்தது.

1987-88 ஆம் நிதியாண்டில் தேர்வாணையத்தால் பெறப்பட்ட விண்ணப்பக் கட்டணங்களிலிருந்து ரூ. 68,479.00 விண்ணப்பதாரர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது.

## தனிச் செலவுகள்.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| கம்ப்யூட்டர் இயந்திரங்கள் .. .. .. | 14,00 |
| போக்குவரத்து, ஸ்டெபிளைசர் விற்பனை வரி செலவினங்கள். | 1.75 |
| கம்ப்யூட்டர் பராமரிப்பு செலவு .. .. .. | 1,25 |
| கம்ப்யூட்டர் தளம் நிர்மாணிக்க மற்றும் மின்சார அமைப்பு செலவுகள். | 6,55 |
| மொத்தம் | 23,55 |

## பகுதி—மூன்று.

### கடிதத் தொடர்பு அளவும் தேர்வாணையத்தின் அமர்வுகளும்.

நடப்பு ஆண்டில் தேர்வாணையம் 3,57,498 அஞ்சல்களைப் பெற்றது. முன் ஆண்டில் பெறப்பட்ட அஞ்சல்களின் எண்ணிக்கை 6,76,647 ஆகும்.

இவ்வாண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 190 வேலை நாட்களில் 50 நாட்கள் நேர்முகத் தேர்வுகளை நடத்தி உள்ளது. தேர்வாணையம் காலையிலும் மாலையிலுமாக நேர்முகத் தேர்வுகளை நடத்தி உள்ளது. அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் எத்தனை நாட்கள் எத்தனை கூட்டத் தொடர்களை நடத்தி உள்ளது என்பதை கீழே உள்ள அட்டவணையில கொடுக்கப்பட்டுள்ளது.

| குழுமம் | நேர்முக தேர்வு நடைபெற்ற நாட்கள். | இரண்டு கூட்டத் தொடர். | ஒன்று மட்டும். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 | .. | .. | .. | .. |
| 2 | .. | .. | .. | .. |
| 1 | 50 | 45 (90) | 5 | 90+5=95 |
| | | மொத்தம் | .. | 95 |

## பகுதி—நான்கு.

### நேரடித் தெரிவுகள் :

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் மொத்தம் 438 பணியிடங்களுக்கு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவற்றில் 206 நுட்பம் சார் பணியிடங்களையும் 232 நுட்பம் சாரா பணியிடங்களையும் சார்ந்தவை ஆகும். இவ்விவரங்கள் பின் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## (அ) நுட்பம் சார் பணிகள்.

### தமிழ்நாடு மருத்துவ பணியில் உதவி மருத்துவருக்கான எழுத்துத் தேர்வுகள் :

உதவி மருத்துவர் பணிக்கான எழுத்துத் தேர்வு 1987 ஆம் ஆண்டு டிசம்பர், 20 மற்றும் 27 ஆம் தேதிகளில் சென்னை மையத்தில் மட்டும் நடைபெற்றது. தேர்வுத்தாள்கள் திருத்தும் பணி தேர்வாணைய அலுவலகத்திலேயே நடைபெற்றது. மொத்தம் உள்ள 963 காலியிடங்களுக்கு 4,100 வேட்பாளர்கள் விண்ணப்பித்திருந்தனர். 3,216 வேட்பாளர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டனர்.

## (ஆ) நுட்பம் சாரா பணிகள்.

### தொகுதி-ஒன்று பணிகள்.

தேர்வாணையம் தொகுதி 1 பணிக்கு 65 பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிட்டது. சுமார் 12,721 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 10,446 வேட்பாளர்கள் மட்டுமே செப்டம்பர் 9, 1987 அன்று நடைபெற்ற முதல்நிலைத் தேர்வில் கலந்து கொண்டனர், அனுமதிக்கப்பட்ட 432 வேட்பாளர்களில் இறுதிநிலைத் தேர்வில் 399 நபர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

### தொகுதி-மூன்று பணிகள்.

தொகுதி 3 பணிக்கு வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப் பட்ட 418 வேட்பாளர்களில் 209 வேட்பாளர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். செப்டம்பர் 28, 1987 முதல் நவம்பர் 3, 1987 வரை வாய்மொழித் தேர்வுகள் நடைபெற்றன.

### தொகுதி-நான்கு பணிகள்.

1987-88 ஆம் ஆண்டு தேர்வாணையத்தால் நான்காம் தொகுதி பணி தேர்வுக்கு போட்டித் தேர்வு ஏதும் நடத்தப்பட வில்லை.

எனினும் சூன் மாதம் 1986 ஆம் ஆண்டு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட நான்காம் தொகுதி பணி போட்டித் தேர்வு முடிவின் மூலமாக காத்திருப்போர் பட்டியல் ஒன்று வெளியிடப் பட்டது. அப்பட்டியலில் தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது) ஊர்நல அதிகாரி தரம் 2 மற்றும் காசாளர் ஆகிய பதவிகளில் 1,200 நபர்களுக்குரிய எண்களும், தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு

நீதிஅமைச்சுப்பணி, தமிழ்நாடு செயலகப் பணி மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகப் பணியில் தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளில் 300 நபர்களுக்குரிய எண்களும் சேர்க்கப்பட்டது. இப்பட்டியலின் காலக்கெடு மார்ச்சு 31, 1988 ஆகும்.

1987-88-ல் இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது), ஊர்நல அதிகாரி தரம் 2 மற்றும் காசாளர் பதவிகளில் 258 நபர்களும் தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் 273 நபர்களும் பல்வேறு அலகுகளுக்கு துணை ஒதுக்கீடு செய்யப்பட்டனர்.

## தொகுதி—ஆறு பணிகள்.

தொகுதி ஆறில் அடங்கிய பணிகளுக்கு 15 காலியிடங்களுக்கு 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விளம்பரம் செய்யப்பட்டது. பத்து விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். டிசம்பர் 2, 1987-ல் டிசம்பர் 4, 1987 வரை இறுதிநிலைத் தேர்வு நடைபெற்றது. 11, டிசம்பர் 1987-ல் நடைபெற்ற வாய்மொழித் தேர்வில் 10 நபர்கள் மட்டுமே தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## தொகுதி-ஏழு பணிகள்.

தொகுதி ஏழில் அடங்கிய பணியில் 22 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டதில் செயல் அலுவலர் நிலை—1 பணிக்கு ஐந்து விண்ணப்பதாரர்களும், செயல் அலுவலர் நிலை—3 பணிக்கு நான்கு விண்ணப்பதாரர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தொகுதி-எட்டு பணிகள்.

தொகுதி எட்டில் அடங்கிய பணிகளுக்கு செயல் அலுவலர் நிலை—4 பணிக்கு எட்டு விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டதில் ஏழு விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டார்கள். நான்கு விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## தொகுதி-ஐந்து பணிகள்.

தொகுதி ஐந்தில் 138 பணியிடங்களை நிரப்புவதற்காக 1987 ஆம் ஆண்டு மே திங்களில் விளம்பரம் செய்யப்பட்டது தமிழகத்தில் உள்ள 16 மையங்களில் நடந்த முதனிலைத் தேர்வில் 18,398 வேட்பாளர்கள் கலந்து கொண்டு தேர்வு எழுதினார்கள். இறுதி நிலை எழுத்துத் தேர்வுகளை எம்மையங்களில்

நடத்துவது என்பதில் தேர்வாணையததின கருத்தொற்றுமை இன்மையால் தேர்வுகள் நடத்தப்பெறவில்லை. இவ்வகையில் தற்போது முடிவொன்று மேற்கொள்ளப்பட்டு இறுதித் தேர்வுகளை குறுகிய காலத்தில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தொகுதி-பத்து பணிகள்.

தொகுதி பத்தில் அடங்கிய 16 பணியிடங்களுக்குரிய முதனிலைத் தேர்வுகள் செப்டம்பர் 13, 1987-ல் ஆறு மையங்களில் நடைபெற்றது. இத்தேர்வினை 4,733 வேட்பாளர்கள் எழுதினார்கள். இறுதி நிலைத் தேர்வுக்கன மையங்களை குறிப்பிடுதல் மற்றும் தேர்வு வினாத்தாட்கள் தயாரிக்கும் முறை ஆகியவற்றில் தேர்வாணையத்தில் கருத்தொற்றுமை இன்மையால் இதுவரை இறுதி நிலைத் தேர்வுகள் நடைபெறவில்லை. இவ்வகையில் தற்போது முடிவொன்று மேற்கொள்ளப்பட்டு இறுதி நிலைத் தேர்வுகளை குறுகிய காலத்தில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தொகுதி-இரண்டு பணிகள்.

தொகுதி இரண்டில் அடங்கிய பணியிடங்களுக்கு 1987, மார்ச் திங்களில் எழுத்துத் தேர்வுகள் நடத்தப் பெற்றன விடை தாட்கள் திருத்தும் பணி 1987 மே திங்களில் முடிவுற்றது. இந்நிலையில் இராமநாதபுரம் தேர்வு மையத்தில் பெருவாரியான பணி வேட்பாளர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே எல்லா மையங்களிலும் 38 விருப்ப பாடங்களுக்கு மூன்று மதிப்பீடுகள் செய்யப்பட்டன இராமநாதபுரம் மையத்தில் மட்டும் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களின் விடைத்தாட்கள் 38 விருப்பப் பாடங்களில் நான்கு மதிப்பீடுகள் செய்யப்பட்டன. பணிவேட்பாளர்களை படிமுறை படுத்த எந்த ஒரு மதிப்பீட்டினை எடுத்துக் கொள்ளலாம் என்பதில் தேர்வாணையத்தில் கருத்தொற்றுமை இல்லை. அரசுக்கு இந்நிலை தெரிவிக்கப்பட்டு முதல் மதிப்பீட்டின் மதிப்பெண்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டு தற்போது பணி வேட்பாளர்களை படிமுறை வரிசைப் படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது. தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்.

தேர்வாணையம் 84 நுட்பம் சார் பணிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்குரிய எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டங்களை அந்தந்த துறைத் தலைவர்களின் ஆலோசனையுடன் தயார் செய்தது.

## பகுதி—5.

### பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவுகள்.

1, ஏப்ரல் 1987 முதல் மார்ச் 31, 1988 வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநிலப் பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகியபொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் பின்வரும் 10 மாநிலப் பணிகளில் 45 வகைப் பணியிடங்களுக்கு நியமிக்கப் பட தகுதியும் பொருத்தமுடைய 340 நபர்களின் பட்டியல் பின் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு தொழில் பணி.
2. தமிழ்நாடு கல்விப் பணி.
3. தமிழ்நாடு பொறியியல் பணி.
4. தமிழ்நாடு மருத்துவப் பணி.
5. தமிழ்நாடு பொதுப் பணி.
6. தமிழ்நாடு எழுதுப் பொருள் மற்றும் அச்சுப் பணி.
7. தமிழ்நாடு கூட்டுறவுப் பணி.
8. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைப் பணி.
9. தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி.
10. தமிழ்நாடு தீயணைப்பு பணி.

மேலே கூறப்பட்ட மாநிலப் பணிகளில் பதவி உயர்வு மூலமும் பணிமாற்றம் மூலமும் நியமனம் பெற தெரிவு செய்யப்பட்ட பணியிடங்களின் பட்டியல் பின் இணைப்பு 3-ல் தரப்பட்டுள்ளது.

## பகுதி—ஆறு.

### சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன.

#### (அ) ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறை படுத்துதல்.

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுக்கூறு 320(3)-ன் உள்ளபடி தேர்வாணையத்தைச் சாதாரணமாக கட்டாயமுறைப் படி கேட்காமல் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள

பதவிகளில் நியமனம் செய்வதற்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 607 பதவிகளுக்கு இசைவு கொடுக்கப்பட்டுள்ளது. 80 நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது :

| வரிசை எண். | பணிவகை. | | இசைவு அளிக்கப் பட்டவை. | இசைவு மறுக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 1. | மாநிலப் பணி | .. | 192 | 23 |
| 2. | சார்நிலைப்பணி | .. | 3 | .. |
| 3. | அமைச்சுப்பணி | .. | 412 | 57 |
| | கூடுதல் | .. | 607 | 80 |

எப்பணிகளில் எந்தெந்த பதவிகளுக்கு அத்தகு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. தினக்கூலி அடிப்படையில் நில அளவையர் மற்றும் வரைவாளர்களாக பணிபுரிய 1,900 நபர்களுக்காக தனித் தேர்வு நடத்தக்கோரிய அரசின் கோரிக்கை தேர்வாணையத்தால் மறுக்கப்பட்டது.

(ஆ) தற்காலிக நியமனங்கள்.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தில் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 3,179 நபர்களை தற்காலிகமாய் நியமனம் செய்து அந்நியமனங்கள் தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

| காலம். | | மாநிலப் பணிகள். | சார்நிலைப்/ அமைச்சுப் பணிகள். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள். | .. | 521 | 179 |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள். | .. | 678 | 234 |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள். | .. | 594 | 133 |
| 24 மாதங்களுக்கு மேல் | .. | 614 | 226 |
| கூடுதல் | .. | 2,407 | 772 |

(இ) தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் 20(எ)(iii)-ன் கீழ் அளிக்கப்பட்ட இசைவு.

தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 20(எ) (iii) ன்படி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தினால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளரின் எண்ணிக்கை 405 ஆகும்.

(ஈ) விதிகள்—பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்.

இவ்வறிக்கை ஆண்டில் அரசால் 401 சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 346 ஐப் பொறுத்தவரை விதிகள் வெளியிடுவதற்கு முன்பு தேர்வாணையத்தைத் கலந்தறியப்பட்டது. மீதமுள்ள 55-ல் 20 வாலாயமானவை. இந்த 20-ஐ தவிர 35 நேர்வுகளில் தேர்வாணையத்தைக் கலந்தறியவில்லை. இருப்பினும் அவைகள் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குட்படாத பதவிகளுக்காகவோ அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக்கூறு 320(3)-ன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ இருந்தன.

(உ) விதி தளர்த்துதல்.

அறிக்கைக்குரிய நடப்பு ஆண்டில் 450 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன. ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தி அரசு 3 நேர்வுகளில் ஆணையிட்டது. அடிப்படை விதிகளைதமிழ்நாடு சிறப்பு ஊதியம் மற்றும் படிகள், விதிகள், மற்றும் தமிழ்நாடு பயணப்படிகள் விதிகள் ஆகியவற்றில் 6 நேர்வுகளில் விதிகளை தளர்த்தி ஆணையிட்டது. அரசே மேலும் 2 நேர்வுகளில் மதராஸ் பங்குத் தொகை பெறு வருங்கால வைப்பு நிதி மற்றும் மதராஸ் பொது வருங்கால வைப்புநிதி ஆகியவற்றில் விதிகளை தளர்த்தி ஆணைகளிட்டது.

## பகுதி—ஏழு.

ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன.

அறிக்கை ஆண்டில் 536 வழக்குகள் மீது (1-4-87 அன்று நிலுவையிலிருந்த 75 வழக்குகள் உட்பட்) தேர்வாணையம் செயல் - நடவடிக்கை மேற்கொண்டது. [சென்ற ஆண்டில் (1986-87-ல்) எப்ரல் 1, 1986 அன்று நிலுவையிலிருந்து 227 வழக்குகள் உட்பட 712 வழக்குகள் மீது தேர்வாணையம்

செயல்நடவடிக்கை எடுத்தது]. மேற்கூறிய 536 வழக்குகளில் 51 வழக்குகளில் ஆவணங்கள் அல்லது விவரங்கள் கேட்கப் பட்டன. 421 வழக்குகளில் தேர்வாணையத்தின் கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. 64 வழக்குகள் நிலுவையாக நின்றன. இவற்றின் மீது தேர்வாணையம் தனது கருத்துக் களை 6 மாதங்களுக்குள் தெரிவிக்க இயலவில்லை. மேற்கண்ட 536 வழக்குகளில் 8 வழக்குகளில் வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்ய தேர்வாணையம் அரசுக்கு கருத்து தெரி வித்தது.

2. தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட்ட 421 வழக்குகளில், 330 வழக்குகளின் மீது அரசு ஆணை பிறப் பித்தது. 91 வழக்குகள் மீதி நிலுவையாக நின்றன

3. ஒரு வழக்கு தொடர்பாக, தேர்வாணையத்தின் கருத்தைக் கோரி கடிதம் எழுத அரசு எடுத்துக்கொண்ட சராசரி நேரம்,, அவ்வழக்கின் மீதான தம் கருத்தை அரசுக்கு பரிந்துரை செய்ய தேர்வாணையம் எடுத்துக்கொண்ட சராசரி நேரம் அவ்வழக்கில் தமது ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக்கொண்ட சராசரி நேரம் ஆகியவை பின் வருமாறு :—

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை. | ஒழுங்கு நடவடிக்கை மேல் முறையீடு முதலியவற்றில் குற்றச்சாட்டுக் குறிப்பாணை அனுப்பிய நாளி லிருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்துக் கோரி அரசு நிலைவரை கடிதம் அனுப்பிய நாள்வரை எடுத்துக்கொள்ளப்பட்ட சராசரி நேரம். | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரி நேரம். | தேர்வாணையம் தனது கருத்தைக் அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக்கொண்ட சராசரி நேரம். | எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நேரம். (3+4+5), |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1987—88 | 330 | 9.3 மாதங்கள். | 6.58 மாதங்கள். | 8.72 மாதங்கள். | 24.6 மாதங்கள் |

மேல்முறையீடு, மனு மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு, இவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கொண்ட வழக்கு களின் எண்ணிக்கை விபரம் மற்றும் வேறு வகைகளில் சாட்டப் பட்ட குற்றச்சாட்டுகளை கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம் ஆகியன பின் இணைப்பு 5-ல் காட்டப்பட்டுள்ளன.

## பகுதி—8.

### அறிவிக்கைகள்.

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தின் பல பணிகளில் வரும் 234 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 4 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட 4 அறிவிக்கைகள் பட்டியல் பின் இணைப்பு 6-இல் தரப்பட்டுள்ளது.

## பகுதி—9.

### தெரிவு தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள்.

### (அ) சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள்.

1987-இல் மே மற்றும் நவம்பர் மாதங்களில் சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. இத்தேர்வுகளுக்கு விண் ணப்பித்தோரின் விவரம்.

| | | 1987 | |
|---|---|---|---|
| | | மே. | நவம்பர். |
| சிறப்புத் தேர்வுகள் | .. | 29,513 | 21,503 |
| துறைத் தேர்வுகள் | .. | 19,079 | 16,671 |

சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் வைக்கப்பெற்ற தேர்வுப் பாடங்கள், மற்றும் தாள்கள் அவற்றில் விண்ணப் பித்து எழுதியோர், தேர்வு பெற்றோர் ஆகிய விவரங்கள் பின் இணைப்பு 7-ல் தரப்பட்டுள்ளன.

### (ஆ) மாவட்ட உதவி ஆட்சியாளர், காவல்துறை அலுவலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் மொழித் தேர்வுகள்.

மேற்கூறிய தேர்வுகளை தேர்வாணையம் 1987 செப்டம்பர் திங்கள் மற்றும் 1988 மார்ச்சு திங்களிலும் நடத்தியது. இத்தேர்வுகளில் முறையே 44 மற்றும் 77 அலுவலர்கள் கலந்து கொண்டனர். இத்தேர்வு முடிவுகளின் பகுப்பாய்வு பின் இணைப்பு 8-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**(இ) தமிழ் புலமைத் தேர்வு.**

தமிழைத் தாய்மொழியாக பெறாத அகில இந்தியபணியைச் சார்ந்த ஆட்சித்துறை, காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கான சூலை 1987-ல் நடத்தப்பட வேண்டிய தமிழ்புலமைத் தேர்வுக்கு ஒருவர் கூட விண்ணப்பிக்காததால் தேர்வாணையம் இத்தேர்வினை (எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வுகள் அடங்கியது) நடத்தவில்லை.

**(ஈ) டேராடூனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியில் சேர்வதற்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் தகுதி காண் தேர்வுகள்.**

இந்திய அரசின், பாதுகாப்புத் துறையின் சார்பில் தேர்வாணையம் இத்தேர்வுகளை ஆகஸ்டு 1987-ல் நடத்திக் கொடுத்தது. இத்தேர்வில் 31 வேட்பாளர்கள் கலந்து கொண்டதில் ஒருவர் மட்டுமே தேர்வு பெற்றார். பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு 1988-ல் நடைபெற வேண்டிய இத்தேர்வுகளை நடத்த இந்திய அரசு ஆணையிடவில்லை.

## பகுதி—பத்து.

### தகுதியும் பொருத்தமும் உடைய பணி வேட்பாளர்கள் இல்லாமை ஆதி திராவிடர்-பழங்குடியினர்.

தகுதியும் பொருத்தமும் உடைய ஆதிதிராவிடர்-பழங்குடியினர் வேட்பாளர்கள் இன்மையால் 15 காலியிடங்கள் இவ்வாண்டு நிரப்பப்படவில்லை. இந்த காலி இடங்களை அடுத்த ஆண்டு தெரிவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. உதவி புவி வேதியியலர் பணியில் ஒரு இடமும், உதவிபுவியியற்பியலாவர் பணியில் ஏழு இடங்களும் உதவி புவியியலாளா பணியில் இரண்டு இடங்களும் வனத்துறை பயிற்றுனர் பணியில் ஐந்து இடங்களும் வேட்பாளர் இன்மையால் நிரப்பப்படவில்லை. இவை பற்றிய விவரங்கள் பின் இணைப்பு 9ல் கொடுக்கப்பட்டுள்ளன•

## பகுதி—11.

### அரசும் தேர்வாணையமும்.

**(அ) அரசு தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டமைக்கு சான்றுகள்.**

1. அரசாணை நிலை எண். 2220, உள்துறை, நாள் 18–9–1987

*1983-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் தமிழ்நாடு காவல் பணியில் துணை கண்காணிப்பு காவலர் (வகை-2) பதவியில் மாற்றம் மூலம் நிரப்பப்பட 1983-84ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீடு ஒன்பது என அரசு தெரிவித்திருந்தது. பின்னர், 1985ஆம் ஆண்டு ஜூலை திங்கள் மேற்படி பதவியில் காலியிட மதிப்பீடு ஒன்பதிலிருந்து ஏழாக அரசால் திருத்தியமைக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டது. மேற்படி பதவியில் 1983-84ஆம் ஆண்டிற்காக மாற்றுதல் முறையில் நிரப்பப்பட வேண்டி காவல் துறை இயக்குனரின் கருத்துரு 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பெறப்பட்டது. அதில் அவர் ஒன்பது நபர்களை பரிந்துரை செய்தார். மேற்படி பதவியில் நியமனம் செய்யப்பட்ட 7 பணியாளர்கள் 'தகுதியுடையவர்கள்' எனவும் 10 பணியாளர்கள் இன்னும் தகுதி பெறவில்லை' எனவும் தேர்வாணையம் பரிந்துரை செய்து அரசுக்கு 1986ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அனுப்பி வைத்தது. அரசு தன் அரசாணை எண். 2220, உள்துறை, நாள் 18-9-1987-ல், பதவியில் நியமனம் செய்யப்பட தகுதி பெற்றவர்கள் அடங்கிய பட்டியலை ஏற்பளிப்பு செய்து ஆணை பிறப்பித்தது. இப்பட்டியலில், காவல்துறை இயக்குனரால் பரிந்துரை செய்யப்படாமலும், தேர்வாணையத்தால் ' இன்னும் தகுதி பெறவில்லை ' என்று பரிந்துரைக்கப்பட்டவர்களான இரண்டு பணியாளர்களின் பெயர்களை 1983-84ஆம் ஆண்டிற்கான பட்டியலில அரசு சேர்த்துக் கொண்டுள்ளது.*

தேர்வாணையத்தால் செய்யப்பட்ட மேற்படி தேர்வில் இன்னும் தகுதி பெறவில்லை' என்று அரசுக்கு பரிந்துரைக்கப்பட்ட பத்து பணியாளர்களில் இருவருடைய திறமைகளையும் தகுதிகளையும் ஆராய்ந்த அரசு, அவ்விருவர்களுடைய எல்லாவற்றையும் உள்ளிட்ட வகைப்படுத்தலை (overall ratings) பார்க்குமிடத்து, துணை கண்காணிப்பு காவலர் (வகை-2) பதவிக்கு தற்காலிக பதவி உயர்வு பெறப்பட அவ்விருவர்களும தகுதி பெற்றவர்களே எனத் தெரிவித்தது. மேலும், அதே காரணங்கட்காக, 1983-84ஆம் ஆண்டிற்கான தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலிலும் அவ்விருவர்களுடைய பெயர்களை சேர்க்க அரசு தீர்மானித்து, இப்பொருளில் தேர்வாணையத்தின் ஆலோசனையைக் கேட்டது. அரசின் மேற்படி கருத்துருவை ஆராய்ந்த தேர்வாணையம் மாற்றுதல் மூலம் நியமனம் செய்யப்பட அவ்விருவர்களும் ' இன்னும் தகுதி பெறவில்லை ' என்று முன்னர் தெரிவித்ததையே மீண்டும் அரசுக்கு வலியுறுத்தியது. இருந்த போதிலும் அரசு மேற்படி இரண்டு பணியாளர்களையும் காவல்துறைத தலைவர் மற்றும் தேர்வாணையத்தால் தகுதியுடையோராக பரிந்துரை செயயப்படாத போதிலும் மேற்கூறப்பட்ட அரசாணையில் காட்டப்பட்ட பட்டியலில் சேர்ந்துள்ளது. இவ்வாறு தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறுபட்ட முறையில், **அரசு ஆணை பிறப்பித்துள்ளது.** இம்மாறுபாடு, கொள்கை

சம்பந்தமான அல்லது தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலொழிய ஏனைய ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்க வேண்டும் என்று அரசு தானே வகுத்துக் கொண்ட மரபின் மீறலாகும். தேர்வாணையத்தின் அறிவுரையை ஏற்காமைக்கு இது ஒரு அரசின் கொள்கை சம்பந்தப் பட்டதோ அல்லது தவிர்க்க இயலாத காரணங்களுடையதோ அல்ல.

**(2). அரசாணை நிலை எண், 25, உள்துறை, காவல்-7, நாள் 5-1-1988.**

ஜூன் 1982-ல் அரசு, மலையம்பாளையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றியவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது தேர்வாணைய ஒழுங்குமுறைவிதி எண். 18 (1) (c)-ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்துக்களை கோரியது. இவ்வழக்கில், தலைமைக் காவலர், அந்நிலைய உதவி ஆய்வாளர் மீது பொய்ப்புகார் கொடுத்தமைக்காகவும் அவரிடம் தகாத வார்த்தைகளைப் பேசியமைக்காகவும் அவர் மீது மூன்று குற்றச்சாட்டுக்கள் விதி எண். 3 (b) (TNPSS Disciplinary and Appeals)-ன்படி ஈரோடு மாவட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளரால் சுமத்தப்பட்டு, விதிமுறைகளின்படி பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பின்னர் அவரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூபாய் 5, நிரந்தரமாக பிடித்தம் செய்யலாம் என்ற கருத்துடன், இவ்வழக்கு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போது, அரசு, குற்றம் சாட்டப்பட்டவர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் முடிவுகள் ஆணையிடப்பட விருக்கும் தண்டனைக்கு உட்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரை 31-1-1979 முதல் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளித்தது. இது தொடர்பாக பிறப்பிக்கப் பட வேண்டிய ஆணை குறித்துத் தேர்வாணைய கருத்துக் களைக் கோரியபோது தேர்வாணையம் குற்றச்சாட்டுகள் நிரூபணமானதாகக் கூறி குற்றம் சாட்டப்பட்டவரின் ஓய்வூதியத்திலிருந்து நிரந்தரமாக மாதம் ரூ. 5 பிடித்தம் செய்யலாம் என்ற கருத்தினை நடைமுறைப்படுத்தலாம் என தெரிவித்தது. அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றிருக்கும் நடைமுறை வழக்கிலிருந்து மாறுபட்டு, குற்றம் சாட்டப்பட்டவரின் நடவடிக்கையால் அரசுக்கு எந்தவித பண விரயமும் ஏற்பட வில்லை எனக் காரணம் காட்டி, அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்து சனவரி 1988-ல் ஆணை வெளியிட்டது. இச்செய்கை கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கடைப்பிடிக்கப் பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

**(3) அரசாணை நிலை எண் : 76, உள்துறை, நாள் 13-1-1988.**

மே திங்கள் 1986-ல் கண்காணிப்பாளர், மத்திய சிறைச் சாலை, மதுரை, ஒரு கைதிக்கு அரசுக்கு முறையீடு செய்யும் உரிமையை மறுக்கப்பட்ட குற்றத்திற்காக தனது ஊதிய உயர்வை மூன்று திங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து அரசு பிறப்பித்த ஆணையை, எதிர்த்து சமர்ப்பித்த மறு ஆய்வு மனுவின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியிருந்தது. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை தேர்வாணையம் நன்கு பரிசீலனை செய்து மறு ஆய்வு மனுதாரருக்கு சாதகமாக குறுக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏதுவுமில்லை என்று தெரிவித்து மறு ஆய்வு மனுவை நிராகரிக்கலாம் என கருத்து தெரிவித்தது. அரசு, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தபின் கண்காணிப்பாளரின் கெட்ட நோக்கத்தினை சரியென்று நிரூபிக்க இயலாது என்றும், அவர் காவல் கைதியின் மனுவை ஆவணங்களில் உள்ள பெயரைக் கொண்டு கையொப்பமிடவில்லை என்ற காரணம் காட்டி நிராகரித்துள்ளார் எனவும், அவர் செய்த குறைபாடு கைதியின் மனு எவ்வித தன்மையுள்ளதாக இருந்த போதிலும் அதனை அப்படியே அனுப்பிவைக்க மறுத்ததேயாகும் என தெரிவித்து அவருக்கு எற்கனவே அளிக்கப்பட்ட தண்டனையை கண்டனமாக குறைத்து வழங்க தீர்மானித்து தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறாக ஆணை பிறப்பித்துள்ளது. இச்செய்கை அரசு கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்கள் உடைய நிகழ்வுகளைத் தவிர மற்றெல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையாக கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

**(4) அரசாணை நிலை எண். 1808, தொழிலாளர், நாள் 19-8-1987.**

1985ஆம் ஆண்டு ஜுலை திங்களில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரகத்தை சேர்ந்த முன்னாள் பணியாளர் (ஊர்தி ஓட்டுநர்) மது அருந்தி விட்டு அலுவலகத்திற்கு வந்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம தரக்குறைவான முறையில் நடந்தார் என்றும் நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்காக தன்னை பணி விலக்கம் செய்து தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் பிறப்பித்த ஆணையை எதிர்த்து அரசுக்கு சமர்ப்பித்த மேல் முறையீட்டின் மீதான தேர்வாணையத்தின் கருத்தினைக் அரசின் தொழிலாளர் துறை கோரியிருந்தது. தேர்வாணையம் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து, கீழ் மட்டத்திலிருந்து அவர் தற்போதைய நிலைக்கு

உயர்ந்தது. மற்றும் தற்காலிக பணி நீக்க காலத்தில் அனுபவித்த துன்பங்கள் இவைகளை கருத்தில் கொண்டு ஒரு கனிவான நோக்குடன் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரால் மேல்முறையீட்டாளர் மீது பிறப்பித்த பதவி விலக்க ஆணையை மேல்முறையீட்டாளரை ஐந்து ஆண்டு களுக்கு அலுவலக உதவியாளராக பதவியிறக்கமாக மாற்றி அமைத்து மேல் முறையீட்டை தள்ளுபடி செய்யலாம் என்று கருத்து தெரிவித்தது. அரசு. முரட்டுத்தனமாக நடந்து கொள்பவர்களுக்கு எவ்வித கருணையையும் காண்பிக்க வேண்டிய அருகதை இல்லை என்று தெரிவித்து மேல் முறை யீட்டாளரின் மேல் முறையீட்டு மனுவை நிராகரித்து தேர் வாணையத்தின் கருத்திற்கு மாறாக ஆணை பிறப்பித்துள்ளது. இச்செய்கை அரசு கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட் டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்றெல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முறையாக கடைப்பிடிக்கப் பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

## (5) அரசாணை நிலை எண். 381, வணிகவரி மற்றும் சமய அறக்கட்டளை, நாள், 21-4-1986.

1982-ம் வருடம் ஜனவரி மாதத்தில், அரசின் வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, வணிகவரி ஆணையரின் முன்னாள் நேர்முக எழுத்தர் மற்றும் உதவி வணிகவரி அலுவலரை பணி விலக்கல் செய்து ஆணையிட்ட வணிகவரி ஆணையரின் ஆணையினை எதிர்த்து, அரசுக்கு செய்து கொண்ட மேல் முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்துகளைக் கோரியது. மேல்முறையீட்டாளர் அவருக்கு கிடைக்கக்கூடிய தெரிந்த வருவாய்க்கு அதிகமாக கட்டப்பட்ட வீட்டிற்கு செலவு செய்த தொகைக்கு கணக்கு காட்டப்பட வேண்டும் என்ற குற்றத்திற்காகவும் மேற்படி செலவுக்குக் கடன்பெற உரிய அலுவலரிடமிருந்து அனுமதி பெறாததற்காகவும் அவ ருக்கு மேற்கண்ட தண்டனை வழங்கப்பட்டது. மேல்முறை யீட்டாளர் கட்டிய வீட்டின் மதிப்பீட்டினை நிர்வாகப் பொறியாளர் அவ்வீட்டினை நேரடியாக பரிசோதித்து வழங்க வில்லையெனவும், அவர் அம்மதிப்பீட்டினை அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிகள் அளித்த அறிக்கைகளின் அடிப்படை யிலேயே வழங்கி உள்ளார் எனவும், எனவே பொதுப்பணித் துறையாளரின் மதிப்பீட்டினை சரியானதாக கருதுவதற் கில்லை எனவும், எனவே அவருக்குக் கிடைக்கக் கூடிய தெரிந்த வருவாய்க்கு அதிகமாக செலவழித்து வீடு கட்டினார் என்று அவர் மீது குற்றம் சாட்டுவது சரியானது அல்ல என்றும் மேலும், வீடு கட்டுவதற்காக கடன் பெற உரிய அதிகாரிகளின் அனுமதியை பெறவில்லை என்ற இரண்டாவது குற்றச்சாட்டு நிரூபணமாவதாகவும் கூறி மேல்முறையீட்

டாளருக்கு வழங்கப்பட்ட பணி விலக்கல் தண்டனையை ரத்து செய்து, அதற்கு பதில் அவரது இரண்டு ஊதிய உயர்வுகளைத் திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து ஆணை வழங்கலாமென்றும் தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. அதற்கு அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்கள் உண்மைகளின் அடிப்படையில் அமையவில்லை எனக் கூறி தேர்வாணையத்தின் கருத்துக்களை மீண்டும் பரிசீலனை செய்து மறு ஆலோசனை வழங்கும்படி அரசு கேட்டுக் கொண்ட போதும், தேர்வாணையம், விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் கூற்றுக்களைப் பரிசீலனை செய்த பின்னரே நிர்வாகப் பொறியாளர் நேரடியாக பரிசோதனை செய்யாமல் அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிகளின் அறிக்கைகளின் அடிப்படையிலேயே மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கியுள்ளதாக தேர்வாணையம் கருதியது என்று கூறி தனது முந்தைய கருத்துக்களையே வலியுறுத்தியது. ஆனால் அரசு வீட்டின் மதிப்பீட்டின் அறிக்கையை வழங்கிய நிர்வாகப் பொறியாளரே நேரில் சென்று அவ்வீட்டினை பரிசோதனை செய்ய வேண்டும் என்பது சரியான வாதம் அல்ல எனவும், மதிப்பீட்டு அறிக்கையே போதுமானது எனவும் கூறி தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டினை நிராகரித்து ஆணை வழங்கியது. இச் செய்கை, அரசு, கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்றெல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

## 6. அரசாணை நிலை எண். 1197, வணிக வரி மற்றும் சமய அறக்கட்டளை, நாள் 4—11—1987.

ஜனவரி 1986-ல் குழித்துறை முன்னாள் உதவி வணிகவரி அலுவலர் (குற்றம் சாட்டப்பட்டவர்) மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்துக்களைக் கோரியது. குற்றம் சாட்டப்பட்டவர் மீது ஐந்து குற்றச்சாட்டுகளைக் கூறிய ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம், அவற்றை விசாரணை செய்து அவர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் மூன்று குற்றச் சாட்டுக்கள் (2, 3 மற்றும் 5) நிரூபணமானதாகவும், அதற்காக அவரை பணி அரவு செய்யலாம் எனவும் தனது அறிக்கையை சமர்ப்பித்தது அவ்வறிக்கையை ஏற்றுக் கொண்ட அப்போதைய வணிகவரி ஆணையர் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்காக ஏன் அவரை பணி அரவு செய்தல் கூடாது என்பதற்குத் தகுந்த காரணம் கூறுமாறு பணித்தார். அதற்கான பதிலினை பரிசீலனை செய்த, அடுத்த வணிகவரி ஆணையர், தீர்ப்பாயத்தின் முடிவிலிருந்து முரண்பட்டு, குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி ஆணை பிறக்கும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைத்தார். அவ்வழக்கின் மீது தேர்வாணையத்தின் கருத்துக்களை அரசு கோறியபோது தேர்வாணையம் குற்றச்

சாட்டுக்களை நிரூபிப்பதில் இரு துறைத் தலைவர்களின் கருத்துக்களில் காணப்படும் முரண்பாடுகளால் இவ்வழக்கு சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது எனவும், அச்சந்தேகத்தினை குற்றம் சாட்டப்பட்டவர்க்கு சாதகமாக கொள்ளவேண்டும் எனவும் கூறி, குற்றம் சாட்டப்பட்டவரை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கலாம் என ஆலோசனை கூறியது. ஆனால் அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களிலிருந்து மாறுபட்டு, இரு துறைத் தலைவர்களின் கருத்துக்களில் காணப்படும் முரண்பாட்டினால் அரசு இவ்வழக்கினை மறு பரிசீலனை செய்யாமல் விட முடியாது எனவும், அரசு அக்குற்றச்சாட்டுக்களைப் பரிசீலனை செய்த பின் மூன்று குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிருபணமானதாக கருதுவதாகவும் கூறி குற்றம் சாட்டப்பட்டவரை அடுத்த கீழ் நிலை பதவியான உதவியாளர் பதவிக்கு மூன்று ஆண்டு காலத்திற்குப் பதவி இறக்கம் செய்து ஆணை வெளியிட்டது. இச்செய்கை கொள்கை சம்பந்தப்பட்ட மட்டும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கடைபிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

## (7). அரசாணை நிலை எண். 261, பி. & ஏ. ஆர். ஓ. பி. 1, நாள் 27—4—1988.

உத்தமபாளைய வட்ட ஆயத்துறை அலுவலர் ஆயத்தீர்வு நிலுவைகளை வசூல் செய்யத் தவறியமைக்காகவும், சாராயம் மற்றும் கள்ளுக் கடைகளின் ஏலத்தினை நடத்தாமல் காலம் தாழ்த்தியமைக்காகவும் வாடகை முன்பண வசூலை தாமதமாக செய்ததற்காகவும், சாராய கடை உரிமங்களை தாமதமாக வழங்கியதற்காகவும் அனுமதிக்கப்படாத இடங்களில் கடைகளை நடத்த ஏலதாரர்களை அனுமதித்ததற்காகவும், அனுமதி இல்லாமல் கிளை கடைகளை நடத்த அனுமதித்ததற்காகவும், அரசு, அவரது ஊதிய உயர்வினை இரண்டாண்டு காலத்திற்குத் திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து ஆணையிட்டது. இவ்வாணையை எதிர்த்து அவர் அரசுக்கு அனுப்பிய மறு ஆய்வு மனுவின் மீது அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களைக்கோரிய போது தேர்வாணையம் மனுதாரர் மீது கூறப்பட்ட எந்தக் குற்றச்சாட்டிலும், அவர் ஊழல் புரிந்ததாகக் கூறப்படவில்லை எனவும், நிர்வாகத் தவறுதல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு மனுதாரர் தகுந்த விளக்கம் அளித்திருப்பதாகவும் மதுரை கோட்ட வருவாய் அலுவலர் மனுதாரருக்கு கள் மற்றும் சாராய கடை வாடகைகளை நல்லமுறையில் வசூல் செய்த வகையில், அளித்த நற்சான்றிதழை கருத்தில் கொண்டும், கனிவு நோக்குடன் மனுதாரரின் வழக்கினை

பரிசீலிக்க வேண்டும் எனக்கூறி அவருக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை 'கண்டனம்' தண்டனையாக மாற்றலாம் என்று ஆலோசனை கூறியது. ஆனால், அரசு, தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு, இம் மாதிரி குற்றச்சாட்டுக்களைக் கனிவு நோக்குடன் அணுகுதல் கூடாது எனக் கூறி மனுதாரரின் மனுவினை நிராகரித்து ஆணை வெளியிட்டது. இச்செய்கை கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நிகழ்வுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும்.

## ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை சில சான்றுகள் :

1. அரசு ஆணை நிலை எண். 368, தொழில், நாள் 3-4-1986ல், தமிழ்நாடு தொழிற் பணியில் வகை 1 மற்றும் 2-ல் வரும் இணை இயக்குநர்கள் துணை இயக்குநர்கள் பதவிகளுக்கு நேரடி நியமன முறையை நீக்கிவிட தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் ஆணை பிறப்பிக்கப்பட்டது இந்திய அரசியலைப்பு பிரிவுக்கூறு 320(3)-ன்படி நியமனம் செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்பே தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டும். அலுவலால் முறைசாராக் குறிப்பு எண். 4020/54 2, பொது (பணிகள்), நாள் 11—9—1954-ன்படி கொள்கை முடிவு எடுப்பதற்கு முன்பே தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டுமேயன்றி விதிகளுக்கு திருத்தம் வெளியிடும் சமயத்தில் கலந்தாலோசித்தல் போதுமானதாகாது. ஆகவே தமிழ்நாடு தொழிற் பணியில் வகை 1 மற்றும் 2-ல் வரும் பதவிகளுக்கு நேரடி முறையை தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் நீக்கியதற்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு அரசிடம் கேட்கப்பட்டது. அதற்கு அரசு மேற் சொன்ன ஆணையை வெளியிடும்போது கவனக்குறைவு காரணமாக தேர்வாணையத்தைக் கலந்தறியவில்லை என்று தெரிவித்துள்ளது. இச்செய்கை அரசு தானே வகுத்த தனது நெறிமுறைகளிலிருந்து பிறழ்வதாகும். இது போன்ற விடுபாடுகளை அரசு எதிர்காலத்தில் தவிர்க்கும் என்று தேர்வாணையம் நம்புகிறது.

## 2. அரசாணை நிலை எண். 3, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி நாள் 21—1—1988.

அரசு, தமிழ்நாடு மருத்துவப் பணியில் உள்ள சில பதவிகளுக்கான மருத்துவ அலுவலர் (இன முறை மருத்துவம்) உள்பட தற்காலிக விதிகள் வெளியிடப்படுவதற்கு முன்னர்

பணியிலமர்த்தப்பட்ட சில பணியாளர்களின் தற்காலிக பணியை வரன்முறைப்படுத்துவதற்காக 1987-ம் வருடம், பிப்ரவரி மாதம் தேர்வாணையத்தின் இசைவினைக் கோரிய பொழுது, மாநிலத்தில் 1975 முதல் 1981 வரை இனமுறை மருத்துவ முறை அமுல்படுத்தப்பட்ட பொழுது தற்காலிக விதிகள் அமைக்கப்படாததாலும், குறிப்பிட்ட விதி இல்லாத தாலும், தனித்தன்மையான சூழ்நிலையில் நியமனம் செய்யப் பட்ட பல்வேறு வகையான அலுவலர்களின் பணியினை பாதுகாக்கும் நோக்கத்துடன் தான் தற்காலிக விதிகளில் காப்புரை சேர்க்கப்பட்டது என்றும், அவர்களின் நீண்டகால பணியின் காரணமாக இனமுறை மருத்துவ புலத்தில் போதிய அளவு முன் அனுபவம் பெற்றவர்களாகவும் பெரும் பாலானவர்கள் நியமனத்தின் போது குறிப்பிட்ட வயது வரம்பிற்குட்பட்டவர்களாகவும், தேவையான அனைத்துத் தகுதிகளையும் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களை இக்கட்டான சூழ்நிலைக்கு உள்ளாக்காமலும், பணியில் அவர் களுக்கு மிகவும் இளநிலையில் உள்ளவர்களும், அவர்களின் மாணவர்களுமான மற்றவர்களுடன் போட்டியிடக்கூடிய தர்ம சங்கடமான நிலைக்கு உட்படுத்தாமலும் இருப்பது செவ்வை யானதாகவும், நியாயமானதாகவும் இருக்கும் என்ற பல காரணங்களை தெரிவித்திருந்தது. மேற்கண்ட கருத்துருவை பரிசீலித்த தேர்வாணையம் அக்கருத்துருவில் ஏற்றுக் கொள்ளக் கூடிய அல்லது போதிய காரணங்கள் இல்லாத காரணத்தால் தனது இசைவினை அளிக்க மறுப்பு தெரிவித்தது. ஆனாலும், அரசு தேர்வாணையத்தின் கருத்தை கருத்தில் கொள்ளாமல் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக்கூறு 320 (3)-ன் விலக்குக்கூறின்படி தற்காலிக பணியாளர்களின் நியமனத்தை தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள்ளிருந்து நீக்கி அவர்களின் பணியினை வரன் முறைப்படுத்தி ஆணையிட்டது. அரசு, மேற்கண்ட ஆணை பிறப்பிக்கும் முன்னர் தேர் வாணையத்தின் கருத்தை மறுபரிசீலனை செய்யக் கோரி தேர்வாணையத்தை அணுகவில்லை. மேலும் அப்பதவிகளை தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லையிலிருந்து விலக்கி ஆணை பிறப்பிக்கும் முன்பே அவர்களுடைய பணிகளை வரன்முறை செய்து ஆணை பிறப்பித்துள்ளது. தேர்வாணையத்தின் அறிவுரைக்கு மாறாக அரசு ஆணையிட்டது. கொள்கை அளவிலான விஷயம் அல்லது தேர்வாணையத்தின் அறிவுரை ஏற்றுக் கொள்ள முடியாததற்கான காரணங்கள் இல்லாத பட்சத்தில் தேர்வாணையத்தின் அறிவுரை அனைத்து நேர்வுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற அரசின் மரபு வழிக்கொள்கை மீறப்பட்டுள்ளது. முறையான பணி முறையில் அல்லாமல் பணியாளர்களை வேறு விதமாக பணி யமர்த்துவதல்லாமல் மேற்படி நேர்வு கொள்கை சம்பந்தப் பட்ட நேர்வோ அல்லது தேர்வாணையத்தின் அறிவுரையை ஏற்றுக் கொள்ள இயலாததற்கான தவிர்க்க முடியாத காரணங்கள் கொண்ட நேர்வோ அல்ல.

